# யாழ். மாவட்ட செயலக வாயிலை மூடி மீனவ அமைப்புகள் இன்று போராட்டம்






இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்தியக் கடற்றொழிலாளர்களைத் தொடர்ந்தும் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலக வாயிலை மூடி இன்று யாழ். மாவட்ட மீனவ அமைப்புகள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தன.

இந்திய மீனவர்களே எமது கடல் வளங்களை அழிக்காதே, கடற்படையே அத்துமீறிய இந்தியா மீனவர்களை கைது செய், கடற்றொழில் அமைச்சரே ஜனாதிபதியே எமது கோரிக்கைகளை நிறைவேற்று எனக் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம. பிரதீபனிடம் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சரை அனுப்புவதற்கான மஜர்களை கையளித்தனர்.

குறித்த மஜகரில் தெரிவிக்கப்பட்டதாவது,

2 ▶


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை 10.11.2023 கதிர் 110



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற்படுவோம்! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை

பல்கலைக்கழக மாணவர்களாலும் ஏனையோராலும் தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயகரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு என்பதோடு அச்செயற்பாடுகளில் அவர்களுடன் இணைந்து நிற்போம், என்று யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கடந்த 5 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை

2 ▶



## அரசியல் தீர்வு விடயத்தில் ஆஸி. மத்தியஸ்தம் வகிக்க வேண்டும்

### சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

அவுஸ்திரேலிய அரசானது இலங்கைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பால் ஸ்டீபன்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கும் இடையிலான நேற்றைய தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2 ▶

## ஷம்மி சில்வாவிடமிருந்து ஜே.வி.பி.க்குப் பணம் நிரூபித்துக் காண்பிக்குமாறு அநுரகுமார சவால்!

### பிரசன்ன ரணதுங்கவுக்கு மன்றில் பதிலடி



இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷம்மி சில்வாவிடமிருந்து ஜே.வி.பி. பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக கூறப்படுவதை முடிந்தால் நிரூபித்துக் காண்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க சவால் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா ஜே.வி.பிக்கு நிதி வழங்கியுள்ளதாக பிரசன்ன ரணதுங்க

2 ▶

## அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் திங்கட்கிழமை விசேட விடுமுறை!

தீபாவளிப் பண்டிகையையொட்டி ஒன்பது மாகாணங்களில் உள்ள அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கப்படுகின்ற விடுமுறைக்குப் பதிலாக வேறு ஒரு சனிக்கிழமை நாளில் பாடசாலைகளை நடத்துமாறு 9 மாகாணங்களில் உள்ள அனைத்து கல்வி வலயத்தின் பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## கருத்துச் சுதந்திரம் துப்பாக்கி முனைக்குத் துதிபாடியதால் எமது கல்விப் புலம் பாரிய பின்னடைவைச் சந்தித்தது!

### ஈ.பி.டி.பி.யின் ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவிப்பு




கடந்தகாலங்களில் பேச்சு சுதந்திரம் எழுத்து சுதந்திரம் கருத்து சுதந்திரம் எல்லாம் துப்பாக்கி முனைகளுக்கு துதி பாடியதால் எமது கல்விப் புலம் பாரிய பின்னடைவுகளை சந்தித்தது என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் இதனை பல்கலைக்கழக மாணவர் சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக வரலாற்றை பார்க்கின்றபோது அன்று பல்கலைக்கழகம் வேண்டாம் வளாகம் மட்டுமே போதும் என்று போர்க்கொடி தூக்கியவர்களை கண்டுகொள்ளாத அன்றைய அரசு தமிழ் மாணவர்களின் நலன்கருதி பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில்

2 ▶

## புதிய யாப்பே மாற்றத்துக்கான தீர்வாக அமையும்! விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க

கிரிக்கெட்டுக்கான புதிய யாப்பே மாற்றத்துக்கான தீர்வாக அமையும் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புவ-தாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று

2 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி பிரதிவாதிகள் 16 வருடங்களின் பின் விடுதலை



உயர்ஸ்தானிகர் பசீர் அலி மொஹமட் மீதான கொலை முயற்சி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூவரும் 16 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பகுதியில் வாகனப்பேரணியாகச் சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் உயர் ஸ்தானிகரை கொலை செய்ய முயற்சி செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக முதலாவது பிரதிவாதியான யோகராஜா நிரோஜனும் இரண்டாம் பிரதிவாதியான சுப்பிரமணியம் சுரேந்திரராஜாவும் மூன்றாம் பிரதிவாதியான கனகரெத்தினம் ஆதித்தன் ஆகிய மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்பதனால் மூவரையும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் இரண்டாம் மூன்றாம் பிரிவுகளின் கீழ் 25 குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது முன் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### புதிய யாப்பே மாற்றத்துக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் தொடர்பாக புதிய யாப்பை உருவாக்குவதற்காக கே.டி சித்ரஸ்ரீ தலைமையில் குழுவொன்றை நியமித்தேன். அதன்படி, கிரிக்கெட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளைத் தடுக்க வேண்டுமாயின் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அந்தக் குழு கிரிக்கெட் யாப்பொன்றை உருவாக்கியுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தாலும் அதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கிரிக்கெட்டுக்கு இந்த புதிய யாப்பே மாற்றத்துக்கான தீர்வாக அமையும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதற்கிடையில், கிரிக்கெட் சபையிலுள்ள சிலர் ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளரனர். மறுபக்கத்தில் புதிய யாப்பைக் கொண்டு புதிய நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டியுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் இலங்கை கிரிக்கெட்டை முன்னெடுத்துச் செல்ல திருடர்களுக்கே வாய்ப்பளிப்பதா, அல்லது கிரிக்கெட்டுக்கும் நாட்டுக்கு நற்பெயரை ஏற்படுத்திய தலைவர் ஒருவரைக் கொண்டு கிரிக்கெட்டை சரிசெய்து முன்னோக்கிச் செல்வதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

அர்ஜுன ரணதுங்க தலைமையிலான குழுவைக் கொண்டு, கிரிக்கெட்டுக்கான புதிய யாப்பை நிறைவேற்றி, புதிய தேர்தல் ஒன்றுக்குச் சென்று, அடுத்து வரும் தொடர்களுக்குத் தயாராக வேண்டும். அதற்காக இந்த நாடாளுமன்றம் எனக்கு முழுமையான ஒத்துழைப்பையும் அனுமதியையும் வழங்க வேண்டும்.

இந்த ஊழல்வாதிகளை நீக்குவதற்காக, நான் எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்திற்குச் சென்று நீதியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றேன். அவ்வாறில்லையென்றால், உயர் நீதிமன்றத்தை நாடுவேன்.

கிரிக்கெட் தொடர்பாக எனக்கு சட்டமா அதிபர் மீது எவ்வித நம்பிக்கையும் இல்லை.

எனவே, என்னுடைய தனிப்பட்ட சட்டத்தரணிகள் ஊடாக இந்த விடயத்தைக் கையாள்வேன், என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கருத்துச் சுதந்திரம் துப்பாக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவியது.

அதன்பின்னர் இன்று யாழ்ப்பாணத்துடன் கிளிநொச்சி, வவுனியா என பல்கலைக்கழகம் பரிணாமம் பெற்றிருக்கின்றது. அன்று அதனை எதிர்த்தவர்கள் இந்தப் போலி தேசியம் பேசும் குழுவினர்தான். இதனை மாணவர் சமூகம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் முற்போக்குச் சிந்தனையுடன் போராடிய யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டதும் அதற்கு நியாயம் கேட்டுப் போராடிய விமலேஸ்வரன் பின்னர் காணாமல் போனதும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் மாணவர் சமூகத்தின் பங்களிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஆனால், இன்று அழிவு யுத்தம் நிறைவுக்கு வந்தபின்னர் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்ற அனைத்தும் இருக்கின்ற நிலையில், மீண்டும் அதை மறுதலிக்கின்ற சூழல் உருவாகிவருகின்றதா? என்ற அச்சம் காணப்படுகின்றது. இதனை மாணவர் சமூகம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (O1)

### ஷம்மி சில்வாவிடமிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

பிரசன்ன ரணதுங்க யார்? உயர்நீதிமன்றில் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர். கப்பம் பெறும் நபர்தான் இவர்.

அண்மையில் இடம்பெற்ற வழங்கொன்றில் கப்பம் கோரிய குற்றத்திற்காக அவர் 20 இலட்சம் ரூபாய் நட்ட ஈட்டை வழங்க வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இரண்டரைக்கோடி தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. 4 வருட சரீரப் பிணையில்தான் பிரசன்ன ரணதுங்க உள்ளார்.

இந்த நிலையில், ஷம்மி சில்வாவின் பணம் எமக்கு வந்ததாக இவர் கூறுகிறார். நாம் அவரைக் கண்டதுகூட கிடையாது.

பிரசன்ன ரணதுங்க இதுதொடர்பாக நாடாளுமன்றில் உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும்.

இது தொடர்பாக விசாரணை நடத்துங்கள்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரினால் நாடாளுமன்றுக்கு தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, நாம் இருக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் வாக்கெடுப்பு இடம்பெறாது என்பது எமக்குத் தெரியும். இது ஏகமனதாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானமாகும். எனவே, இல்லாத வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவேண்டிய தேவையில்லை என்றே நாம் சபையில் இருக்கவில்லை.

ஷம்மி சில்வாவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற தேவை எமக்கு இருக்கவில்லை.

விளையாட்டுத்துறை அமைச்சரிடம் நாம் கிரிக்கெட் சபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தனிப்பட்ட ரீதியாக வலியுறுத்தியிருந்தோம், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அரசியல் தீர்வு விடயத்தில் ஆஸி. ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் தொடர்பாகவும், குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பகுதிகளில் காணப்படும் பிரச்சனைகள் தொடர்பான முழு விபரங்களை அறியும் முகமாகவும், அதற்கான தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தகவல் வழங்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், எமது கட்சியின் எதிர்கால மாநாடு தொடர்பாகவும், இளைஞர்கள், புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவும் இலங்கையைப் போல் கூட்டாட்சி அரசியல் அமைப்பைக் கொண்ட நாடாகும். அங்கு மாநிலம் போல் இங்கு மாகாணமாகக் காணப்படுகின்றது.

அங்கு மற்றைய நாடுகளைப் போல் அல்லாது இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்த சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பலர் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது, என்று தெரிவித்துள்ளார். 9அ)

### பல்கலைக்கழக சமூகமாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, மயிலத்தமடு - மாதவனைப் பகுதி மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிவரும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

அப்போராட்டம் எவ்வித குழப்பங்களும் இன்றி யாருக்கும் இடையூறுகளுமின்றி நடைபெற்று முடிந்த பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவர்களை வந்தாறுமூலைப் பகுதியில் இடைமறித்து அவர்களில் 6 மாணவர்களை ஸ்ரீலங்கா காவல்துறையினர் கைது செய்தமையானது ஒரு திட்டமிட்ட ஜனநாயக விரோதச் செயற்பாடு ஆகும். இச்செயற்பாடு ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர்களினதும் ஏனையவர்களினதும் செயற்பாடுகளை அச்சுறுத்தும், அரச படைகள் மூலம் அடக்கும் நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னெடுக்கக்கூடாது என கோருவதோடு, கைதுசெய்யப்பட்டு வழக்குப்பதியப்பட்ட மாணவர்கள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம்.

பேரினவாத அரசாங்கத்தின் துணையோடு தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், அவர்களது மரபு ரீதியான வாழிடங்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள், மொழி, கலாசார அழிப்புக்கள் என்பவற்றின் வாயிலாக தமிழ் மக்கள் இனவழிப்பு செய்யப்பட்டபோது அவற்றிற்கு எதிராக போராடி தம் வாழ்வையே அர்ப்பணித்து தமிழர்களைக் காத்துநின்ற உத்தமர்களை "பாசிசவாதிகள்" என்று எவரும் கூறவும் முடியாது, அதனை தமிழர்கள் யாரும் ஏற்கவும் மாட்டார்கள் என்பதனை கூறுகின்றோம்.

பொருளாதார நெருக்கடி, ஜனநாய நெருக்கடி என பல நெருக்கடிகளை நாட்டுமக்கள் எதிர்நோக்கும் இன்றைய காலச் சூழலில் நியாயத்திற்காகவும், உரிமைக்காகவும் போராடுபவர்களையும் சமூகச்செயற்பாட்டாளர்களையும், தொழிற்சங்கவாதிகளையும், மக்களையும் பாசிச செயற்பாடுகளின் மூலம், அரசாங்கம் அடக்கி ஒடுக்கி அடிபணியவைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில் நாம் எமக்குள்ளே பிளவுபட்டு நிற்காது பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் என்பதனை பல்கலைக்கழக சமூகத்தில் ஒரு அங்கம் என்ற ரீதியில் வலியுறுத்தி நிற்கின்றோம்.

அதே நேரத்தில் பல்கலைக்கழக மாணவர்களாலும் ஏனையோராலும் தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயகரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு என்பதோடு அச்செயற்பாடுகளில் அவர்களுடன் இணைந்து நிற்போம் எனவும் தெரிவித்து நிற்கின்றோம், என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாழ். மாவட்ட செயலக வாயிலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அத்துமீறி எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடல் பரப்பில் சட்ட விரோதமான இழுவைமடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை தாங்கள் அறிந்ததே.

இதன்காரணமாக. வடக்கு மாகாணம் கடற்றொழிலாளர்களாகிய எங்களின் வாழ்வாதாரமும் எமது கடல் வளங்களும் அழிக்கப்படும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

தொடர்ச்சியாக, எங்களது கடல் பரப்பில் நுழைகின்ற நூற்றுக்கணக்கான இந்திய ரோலர் வருகையால் மீன் உற்பத்திக்கு ஏதுவான பவளப் பாறைகள் அழிக்கப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் எமது கடற்பரப்பில் கடலுணவுகள் அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் மக்களுக்கு தேவையான புரதச்சத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாகி வருகின்றது.

இந்த நிலை தொடருமானால் கற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்த்து வருகின்ற வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்காலத்தில் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும்.

இது தொடர்பாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைவாக கடற்றொழில் திணைக்களத்தினரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும், கடற்படையினரும் பல்வேறு அவை போதுமான விளைவை ஏற்படுத்தவில்லை என்பதே தமிழ் பேசும் கடற்றொழிலாளர்களாகிய எமது ஆதங்கமாகும்.

நாங்கள் எதிர்கொள்ளும் அவலங்களை தமிழக மக்களுக்கும், தமிழக தலைவர்களுக்கும் எடுத்துரைத்து, இந்த விவகாரம் தொடர்பான உண்மைகளையும், புரிதலையும் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும், எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)


**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

**காலைக்கதிர் TV YouTube தளம்**

# ரோபோ உருவாக்கம், புதிய ஆக்கப்படைப்புக்கள் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு மாணவர்கள் முதலிடங்கள் பெற்றனர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்ற அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புதிய ஆக்கப்போட்டித் தொடரின் கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்டப் போட்டி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் இடம் பெற்றது.

இதில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பல பாடசாலை மாணவர்களின் கண்டுபிடிப்புகள் போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

இப்போட்டித் தொடரானது ரோபோ தொழிநுட்பம் தொடர்பான பிரிவு மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான பிரிவு என்கின்ற இரண்டு பிரிவுகளில், உற்பத்தித்தொழில் மற்றும் சுற்றுச்சூழல் கல்வித்துறை, கல்வித்துறை, பொறியியல் தொழிநுட்பம் மற்றும் உற்பத்தித்துறை, பொழுதுபோக்குத்துறை, சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறை என 5 துறைகளின் கீழ் நடத்தப்படுகிறது.

கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தை சேர்ந்த 8 மாணவர்கள் பங்கு பற்றி இருந்ததுடன் அதில் மட்டக்களப்பு, மண்முனை மேற்கு கன்னங்குடா மகா வித்தியாலய மாணவன் என்.கிரோஜன் புதிய கண்டுபிடிப்புகள் பிரிவில் சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறையில் போட்டியிட்டு முதலாவது இடத்தைப் பெற்றார். மட்டக்களப்பு, மண்முனை மேற்கு வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலய மாணவன் கே.கவிராஜ், ரோபோ தொழில்நுட்பம் தொடர்பான பிரிவில் கல்வித்துறையில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.



அத்தோடு மண்முனை மனைக்காடு மேற்கு விவேகானந்த மகா வித்தியாலய மாணவன் கே.டிபாணுஜன் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரிவில் பொறியியல் தொழிநுட்பம் மற்றும் உற்பத்தித் துறையில் 3 வது இடத்தைப் பெற்றார். முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய மாணவன் கே.கபிலாஸ் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரிவில் உற்பத் தித் தொழில் மற்றும் சுற்றுச்சூழல் கல் வித்துறையில் போட்டியிட்டு மெரிட் சான்றிதழையும், மகிழவட்டுவான் மகா வித்தியாலய மாணவன் பீ. ஜரோட்சன் ரோபோ பிரிவில் சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் துறையில் மெரிட் சான்றிதழையும் பெற்றதோடு 3 மாணவர்களுக்கு திறமைக்கான சான்றிதழும் வழங்கப்பட்டன.

அதி கஷ்ட, கஷ்டப் பாடசாலைகளை மாத்திரம் உள்ளடக்கிய குறித்த மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலிருந்து போட்டிக்குச் சென்று பல்வேறு வசதிகளை உடைய ஏனைய பாடசாலை மாணவர்களுடன் போட்டி போட்டு வெற்றி பெற்றதன் மூலம் குறித்த மாணவர்கள் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கும் அவர்களது பாடசாலைக்கும் பெருமையினைத் தேடிக்கொடுத்துள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தின் பண்டிகை விற்பனைக் கண்காட்சி



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தீபாவளிப் பண்டிகை முன்னிட்டு பண்டிகை காலங்களில் நடத்தப்படுகின்ற நிகழ்வில் ஒன்றாக விற்பனைக் கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சிறுதொழில் முயற்சியார் பிரிவினால் நடத்தப்படுகின்ற இந்த நிகழ்வு கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் இன்று ஆரம்பமானது.

கிளிநொச்சி மாட்ட அரசாங் அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இந்தக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார். இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளனர். (02)

# துப்பறியும் சாம்புவும் செயற்கை நுண்ணறிவும் மாணவருக்கான அறிவியல் கலந்துரையாடல்




பேராசிரியர் துரைராசாவின் பிறந்ததினத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான அறிவியல் கலந்துரையாடல் ஒன்றினை சூம் தொழிநுட்பத்தினூடாக நடத்துவதற்கான ஒழுங்கமைப்பை சிறகுகள் அமைப்பு மேற்கொண்டுள்ளது.

துப்பறியும் சாம்புவும் செயற்கை நுண்ணறிவும் எனும் தலைப்பில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கலாநிதி உதயசங்கர் தயாசிவம் பேச்சாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

https://learn.zoom.us/j/67503950277?pwd=Smdud-FpRcTFXbjZ4YUg4dHJRcmhWZz09 எனும் இணைப்பினூடாக

Zoom Meeting ID: 675 0395 0277, Passcode: 23@ Siraku ஆகியவற்றைப் பயன்படுத்தி தரம் 6, 7, 8, 9 இல் பயிலும் மாணவர்கள் கலந்துகொள்ள முடியும் என்று சிறகுகள் அமைப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது.



# காஸா பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு தினமும் 4 மணித்தியாலங்களுக்கு தாக்குதல் நிறுத்தம்

முற்றுகையிடப்பட்டுள்ள காஸா பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு வசதியாக, தினமும் 4 மணித்தியாலங்களுக்கு தாக்குதல் நிறுத்தத்தை மேற்கொள்ள இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசி மூலம் அதிபர் ஜோ பைடன் திங்கள்கிழமை தொடர்பு கொண்டார்.

அப்போது, காஸாவிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு வசதியாக தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு அந்தப் பகுதியில் தாக்குதலை நிறுத்திவைக்க வேண்டும் என்று நெதன்யாகுவை பைடன் கேட்டுக்கொண்டார்.

அதனை ஏற்று, தினமும் 4 மணி நேரத்துக்கு காஸாவில் தாக்குதலை நிறுத்திவைக்க இஸ்ரேல் அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இந்த தினசரித் தாக்குதல் நிறுத்தம் நவம்பர் 9 முதல் அமலுக்கு வருகிறது.

ஹமாஸுக்கு எதிராக தங்கள் நாட்டு ராணுவம் தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டு வரும் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்காக, 2ஆவது பாதுகாப்பு வழித்தடத்தை இஸ்ரேல் திறந்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினரின் கோட்டையாகத் திகழும் காஸா சிட்டிக்குள் நுழைந்து அவர்களை வேட்டையாடுவதற்காக அந்த நகரை நோக்கி இஸ்ரேல் ராணுவம் முன்னேறி வருகிறது.

இந்த நிலையில், காஸா சிட்டியிலும் வடக்கு காஸா பகுதிகளிலும் வசிக்கும் பொதுமக்கள் தெற்கு காஸாவுக்கு வெளியேற இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டது.

அதற்காக, குறிப்பிட்ட நேரத்துக்கு தாக்குதல் நிறுத்தம் மேற்கொள்வதாகவும் ராணுவம் கூறியது.

அதையடுத்து, நடைபயணமாகவும், கழுதை வண்டிகளிலும் அந்த நகரிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் தெற்குப் பகுதியை நோக்கி புதன்கிழமை முதல் வெளியேறி வருகின்றனர்.

இந்த நிலையில், பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிக்கு வெளியேறுவதற்கு வசதியாக தினமும் 4 மணி நேரத்துக்கு தாக்குதல் நிறுத்தம் மேற்கொள்ள இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அரசு தற்போது அறிவித்துள்ளது. (04)






# ஹாலிவுட்டில் பல மாதங்களாக நடைபெற்ற நடிகர் சங்கப் போராட்டம் முடிவுக்கு வந்தது

ஹாலிவுட்டில் பல மாதங்களாக நடைபெற்றுவந்த மிகப் பெரும் நடிகர் சங்கப் போராட்டம் தற்காலிக ஒப்பந்தத்தின் அடிப்படையில் முடிவுக்கு வந்துள்ளது.

எனினும், மீண்டும் பழையபடி தொடர்களும் திரைப்படங்களும் வெளிவர இன்னும் சில மாதங்களாகும் எனத் தெரிகிறது.

இந்த ஒப்பந்தத்தால் ஆறு மாதங்களுக்கும் மேலாக லொஸ் ஏஞ்சலீஸில் வேலையின்றித் தவித்த அனைத்து திரை மற்றும் தொடர்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் துயரும் களையப்பட்டுள்ளது எனவும், விரைவில் பத்தாயிரத்திற்கும் மேலான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும், என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வேலைகள் மீண்டும் துவங்கப் போகும் நிலையில், மக்கள் அதிகம் எதிர்பார்த்த ‘டெட்பூல், ஆபட் எலமன்டரி, தி லாஸ்ட் ஆப் அஸ்’ ஆகிய படைப்புகள் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொடர் போராட்டம் வெற்றியைத் தந்துள்ளதால் அனைத்து நடிகர்களும் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

லொஸ் ஏஞ்சலீஸ் நகரத்தில் ஹாலிவுட் திரைப்படங்களுக்கான நடிகர் சங்கமமானது தயாரிப்பாளர் சங்கத்தினருடனான தொழில் ரீதியான முரண்பாடுகளால் 4 மாதங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது. இந்த நீண்ட காலக் காத்திருப்பு உரிய பலனை நடிகர்களுக்குத் தந்திருப்பதாக, நடிகர் சங்கத்தின் தலைமை இயக்குநரும் தலைமைப் பிர திநிதியுமான டங்கன் தெரிவித்துள்ளார்.

இந்த தற்காலிக ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள மொத்த விவரங்களும் அடுத்த வாரம் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும். எனினும் அதன் முக்கிய அம்சங்கள் சில மட்டும் தெரியவந்துள்ளன. அதில் 40 வருடங்களாக இல்லாத அளவில் நடிகர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தில் உயர்வு, மற்றும் நடிகர்களுக்குப் பதிலாக செய்யறிவு தொழிநுட்பத்தைப் பயன்படுத்த விரிவான ஒப்புதல் மற்றும் இழப்பீடு ஆகியவை இடம்பெற்றுள்ளன.

மேலும் அடுத்தகட்டமாக தொடங்கப்பட அல்லது வெளிவரப் போகும் திரைப்படம் மற்றும் தொடர்களின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ‘மிசன் இம்பொஸிபிள்’ மற்றும் ‘கிளாடியேட்டர்’ ஆகிய பெரிய படைப்புகள் இடம் பெற்றிருந்தன.

மேலும், போராட்டத்திற்கு முன்பாக நடிகர்கள் நடித்து முடித்த படங்களின் அறிமுக நிகழ்ச்சிகளிலும் நேர்காணல்களிலும் பங்கு பெறக்கூடாது என்றிருந்த விதிமுறையும் நீக்கப்பட்டதால் மக்கள் தங்கள் விருப்பமான நடிகர்களை விரைவில் நேரிலும் சின்னத்திரையிலும் காணலாம். (04)

# டெல்லியில் நேற்றிரவு மழை பெய்ததால் காற்று மாசுபாட்டின் அளவு குறைந்தது



இந்தியத் தலைநகர் டெல்லியில் நேற்றிரவு ஆங்காங்கே மழை பெய்ததால் அங்கு காற்று மாசுபாட்டின் அளவு சற்றே குறைந்துள்ளது. இதனால் இன்று காலை 7 மணியளவில் டெல்லியில் காற்றின் தரக் குறையீடு 408 என்ற அளவில் இருந்தது. நேற்று மாலை இதுவே 437 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

காற்றின் தரக் குறியீடு 0 - 50 வரையில் இருந்தால், காற்றின் தரம் நன்றாக இருப்பதாக அர்த்தம். அதுவே, அக்குறியீடு 400 - 500 ஆக இருந்தால், காற்று மிகவும் மாசடைந்து இருப்பதாக அர்த்தம். காற்றுமாசு தீவிரமாக உள்ள நிலையில் டெல்லியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்திய வானிலை ஆய்வு மையமானது தீபாவளிக்கு முன்னர் டெல்லியில் காற்றின் தரக் குறியீடு கணிசமாக முன்னேறும் என்று கணித்துள்ளது. பரவலான மழைக்கு மிதமான வாய்ப்பிருப்பதாகவும் கூறியது.

மேலும், வடமேற்கில் இருந்து தென் கிழக்கு நோக்கி காற்றின் திசை மாறுவதாலும், புதிதாக மேற்கில் ஏற்பட்டுள்ள கலக்கத்தால் வடமேற்கு இந்தியாவில் பயிரிக் கழிவு எரிப்பால் ஏற்பட்டுள்ள புகை கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

பிராந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள முன்னறிவிப்பில் இன்று (நவ.10), டெல்லி, சோஹானா, ரேவாரி, அவுரங்காபாத், ஹோடால் (ஹரியாணா). பீஜ்நாவுர், சகோடி, மீரட், டண்டா,ஹஸ்தினாபுர், சந்த்பூர், தவுராலா, மோடிநகர், கிதோர், அம்ரோஹா ஆகிய பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளது.

டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய், அதிகரித்து வரும் மாசுபாட்டைச் சமாளிக்க தேசிய தலைநகரில் செயற்கை மழையைத் தூண்ட முயற்சிப்பதாக அண்மையில் தெரிவித்திருந்தார். இம்மாதம் 20, 21 திகதிகளில் இதற்காக திட்டமிடப்பட்டுள்ள சூழலில் இப்போதைய மழை ஆறுதலாக அமைந்துள்ளது. (04)

# கேரள தலைமைச் செயலக அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டதாக மிரட்டல்



கேரள தலைமைச் செயலக அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக மர்ம தொலைபேசியில் மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து, மோப்ப நாய் உதவியுடன் வெடிகுண்டு நிபுணரகள் மற் றும் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இந்த நிலையில், வெடிகுண்டு மிரட்டல் வெறும் மிரட்டலுக்கான புரளி எனத் தெரியவந்தது. இது தொடர்பாக நிதின் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேரள தலைமையகத்திற்கு வந்த இந்த மிரட்டல் மனநலம் சரியில்லாதவர் என்று சந்தேகிக்கப்படும் நபரால் செய்யப்பட்ட அழைப்பு என்பதை காவல்துறையினர் உறுதிப்படுத்தினர். இவர் பொழியூரில் உள்ள உச்சகடாவில் வசிப்பவர் என்று தெரியவந்துள்ளது. வெடிகுண்டு மிரட்டல் வந்தவுடன், மோப்ப நாய்கள் உதவியுடன், தலைமைச் செயலக வளாகத்தில் காவல் துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டதால், இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (04)

# உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் சீனாவை முதல் முறை முந்தியது இந்தியா

பிரபல கியூ.எஸ். உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் வெளியாகியுள்ளது. அதிகமான உயர்கல்வி நிறுவனங்களுடன் இந்தியா முதன்முறையாக சீனாவைப் பின்னக்குத் தள்ளி முன்னிலை பெற்றுள்ளது. உலக பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 100 தரவரிசையில் மொத்தம் ஏழு இந்திய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

இங்கிலாந்தை தளமாகக் கொண்ட தரவரிசை நிறுவனமான 'குவாகுவரெல்லி சைமண்ட்ஸ் (கியூ.எஸ்.), உயர்கல்வி நிறுவன பேராசிரியர்களின் ஆய்வுகள் சமர்ப்பிப்பு, கல்வி நிறுவனத்தின் கல்வி முறை மற்றும் ஊழியர்களுக்கான மதிப்பு, ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் ஆகிய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உலக அளவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்து ஒவ்வொரு ஆண்டும் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி, 2024 ஆம் ஆண்டிற்கான உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலை புதன்கிழமை வெளியிட்டது.

அதில், 25 நாடுகளைச் சேர்ந்த 856 நிறுவனங்களைக் கொண்ட இந்த தரவரிசைப் பட்டியலில், ஆசியாவில் இப்போது அதிக பிரதிநிதித்துவம் பெற்ற உயர்கல்வி முறையாக இந்தியா உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகைகள் கூடுதலாக 37 உயர் கல்வி நிறுவனங்களுடன் மொத்தம் 148 இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன. இந்தியாவுக்கு அடுத்து கூடுதலாக 7 உயர் கல்வி நிறுவனங்களுடன் மொத்தம் 133 உயர்கல்வி நிறுவனங்களுடன் சீனாவும், 96 உயர்கல்வி நிறுவனங்களுடன் ஜப்பானும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

சீனாவின் பீஜிங் பல்கலைக்கழகம் இந்த ஆண்டும் தனது முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. முதல் 100 தரவரிசையில் மொத்தம் ஏழு இந்திய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. அதில், மும்பை ஐஐடி அதன் முதல் தரவரிசையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது. பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி), ஐஐடி சென்னை, ஐஐடி தில்லி, ஐஐடி கான்பூர், ஐஐடி காரக்பூர், தில்லி பல்கலைக்கழகம் ஆகியவை ஆசிய அளவில் இடம்பிடித்துள்ளன. தரவரிசைப் பெற்ற பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையில் இந்தியா சீனாவை பின்னக்குத் தள்ளியுள்ளது.

இந்தியாவில் ஆராய்ச்சி வெளியீடு 2018 முதல் 2022 வரை அதிவேகமாக அதிகரித்துள்ளது. இந்த காலகட்டத்தில் சுமார் 60 சதவீதம் அதிகரித்துள்ளது. இது உலக பல்கலைக்கழகங்களின் சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம். அதே நேரத்தில் இதே காலகட்டத்தில் சீனாவின் வளர்ச்சி 9 சதவீதம் அதிகரித்து, 69 சதவீதமாக உள்ளது.

மேலும், இந்தியாவில் ஆராய்ச்சி (பிஎச்.டி.) தகுதியுடன் கூடிய பேராசிரியர்கள் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்திருக்கிறது. வலுவான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளிலும் இந்தியா நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்திய உயர்கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சித் திறன் மேலும் சர்வதேச தரத்துக்கு உயர்வதற்கான சாத்தியக்கூறுகளும் ஆய்வில் தெரியவந்துள்ளது. குறிப்பாக சர்வதேச ஆராய்ச்சி தொடர்பு குறியீட்டில் இந்தியா 15.4 புள்ளிகளையும், பிராந்திய அளவில் 18.8 புள்ளிகளையும் இந்தியா பெற்றுள்ளது. அதுபோல, அமெரிக்காவில் உயர்கல்வி மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவில் சீனாவை விஞ்சி இந்தியா முன்னிலை பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கியூ.எஸ். நிறுவன துணைத் தலைவர் பென் சோடெர் கூறுகையில், 'தரவரிசைப் பட்டியலில் இந்திய உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பது, உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்த இந்தியா மேற்கொண்டுவரும் முயற்சியையும், ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் இந்திய கல்வி நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றிவருவதையும் பிரதிபலிக்கிறது' அதே வேளையில், உலகளாவிய கல்விச் சமூகத்தில் இந்தியா தனது நிலையை மேலும் உயர்த்துவதற்கான பாதையை இது விளக்குகிறது என்றார்.

மியான்மர், கம்போடியா மற்றும் நேபாள நாடுகளின் உயர்கல்வி நிறுவனங்கள் முதன்முறையாக இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# கசிப்பு உற்பத்திக்கான 6 பரல் கோடா கிளிநொச்சி பெரிய குளத்தில் சிக்கியது



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரிய குளம் பகுதியில் பெரும் காடுகள் காணப்படுவதால் இப்பகுதியில் சட்டவிரோதக் கசிப்பு உற்ப்பத்தி தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தர்மபுர பொலிசாரினால் பாரியளவு கசிப்பு கோடாக்கள் கைப்பற்றப்பட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்றைய தினமும் அதே பகுதியில் கசிப்பு உற்பத்திக்காக குளத்தின் நடுப்பகுதியில் தண்ணீருக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பரல் கோடாவை கிளிநொச்சி பொலிசார், கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் சங்கம் மற்றும் கிராம இளைஞர்கள் அனைவரும் இணைந்து கைப்பற்றி, கிளிநொச்சி பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். (02)

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அனுசரணையில் சாய்ந்தமருதில் மாற்றுத் திறனாளருக்கு உலர் உணவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையில், சாய்ந்தமருது அல்-சுபைதா பவுண்டேஷன் ஏற்பாட்டில், மாற்றுத்திறனாளர் மற்றும் விசேட தேவையுடைய 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பாரூக் புக்ரி, உதவி உயர்ஸ்தானிகர் பைசல் மற்றும் பாகிஸ்தான் உயஸ்தானிகராலயத்தின் இதர அலுவலகர்கள், முன்னாள் பிரதேச செயலாளரும் தேர்தல்கள் மறுசீரமைப்பு ஆணையாளருமான ஏ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலை அதிபர் றிப்கா அன்சார், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் மற்றும் உதவி பெற தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன் சாய்ந்தமருது மழ்ஹரூஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் மூலம் விசேட தேவையுடைய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.

# திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி




(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த கந்த சஷ்டி விரதம் எதிர்வரும் 14ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

விரதகாலத்தில் தினமும் விசேட பூசைகள் ஆலய பிரதம குரு சிவஸஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில், ஆலய குரு சிவஸ்ஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் உதவியோடு இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி சூரசங்காரம் இடம்பெற்று, மறுநாள் 19ஆம் திகதி திருக்கல்யாண நிகழ்வோடு கந்த சஷ்டி விரதம் நிறைவடையவுள்ளது.



# அறம் வென்று, அநீதி தோற்ற தீபாவளி திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து



இன்பங்கள் நிலைத்து, துன்பங்கள் நீங்கி, எல்லா மனிதரும் சமன் என்ற அறம் வெல்லவும் அநீதி தோற்கவும் ஓர் அடையாளத் திருநாளாக திகழும் தீபாவளித் திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம், என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

மனித குலத்தின் மகத்தான வாழ்வின் வெற்றி என்பது, புதிய உலகு நோக்கி நிமிர்ந்தெழும் காலத்தை படைப்பதே ஆகும்.

யாமார்க்கும் அடிமையல்லோம் யமனை அஞ்சோம், என்ற எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லவும்

முயல்வோம், வெல்வோம், நிமிர்வோம், உளம் சோரோம் என்ற எமது இலட்சியப்பயணம் எண்ணிய இலக்கை எட்டவும் நாம் இடையறாது உழைப்போம்!

எம் தமிழ் தேசம் தலை நிமிரவும் அரசியல் பொருளாதார சமூக சமத்துவ நீதி ஓங்கவும், பாமர மக்களின் வாழ்வுயரவும் உழைக்கும் மக்களின் உரிமைகள் வெல்லவும், அழிவாயுதங்கள் அன்றி அறிவாயுதம் ஒன்றே மாற்று வழியென நாம் பாதையை மாற்றினோம் பயணத்தை நிறுத்தவில்லை.

தீபாவளித்திருநாள் என்பது வெறுமனே புத்தாடை அணியவும், பொது விழாக்களை பட்டாசு கொழுத்தி கொண்டாடி மகிழவும் உண்டாகிய நாள் மட்டுமல்ல, மாறாக, மாற்றமொன்று எங்கள் மண்ணில் மலர்ந்ததை கொண்டாடும் பெருநாளாக அது மலர வேண்டும்.

அழிவு யுத்தத்தின் அநீதிகளை கடந்து வந்த எமது மக்கள் நிம்மதிப் பெருமூச்சை இன்று விடுகின்றனர். அந்த நிம்மதிப்பெருமூச்சு சுதந்திரக்காற்றாக எமது மண்ணில் நீடித்து வீச வேண்டும்.

மாற்றமொன்றே எமக்கு தேவை, மாற்றங்களை எமது மண்ணில் உருவாக்கி காட்டுவதற்கு மாறாக, நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம் என புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர்.

அவைகளை ஊதிப்பெரும்பித்து மக்களை உசுப்பேற்றி கூச்சலிட்டும் வருகின்றனர். அதன் மூலம் அடுத்த தேர்தல் போட்டிக்கான அத்திவாரங்களே இங்கு நடந்தேறி வருகின்றன.

தேர்தலுக்காக அன்றி எம் தமிழ் தேசத்திற்காக தியாகங்களை ஏற்று நடக்கும் எமது யதார்த்த வழிமுறை மீது சேற்றை வாரித் தூற்றுவோர் முடிந்தளவு தூற்றட்டும்.

நாம் நேசிக்கும் மக்களுக்கான நிரந்தர விடியலை எட்டும் எமது இலட்சிய பயணத்தை அரசியல் காழ்ப்புணர்சியின் காரணமாக அவதூறு பொழிவோரை எதிர்கொண்டு நாம் பயணிப்பதே இன்று நாம் ஆற்றும் தியாகங்கள். கூச்சல்களாலும், கொக்கரிப்புகளாலும் எந்த கோட்டையின் கதவுகளும் திறக்காது.

அழகார்ந்த உரிமை வாழ்வை சகல மக்களும் அனுபவித்து நிமிர வேண்டும். இல்லங்கள் தோறும் துயரங்கள் அற்ற மகிழ் வாழ்வு மலர வேண்டும்.

தீபாவளித்திருநாளின் அர்த்தங்கள் தேசமெங்கும் தீப ஒளியாக துலங்க வேண்டும்.

அறம் வெல்லும், அதீதி தோற்கும், என்று அவரது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

# கதிர்காமத்தில் பூசைக்காக விற்கப்படும் பழங்கள் உண்பதற்கு ஏற்றவையல்ல!

## பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி



கதிர்காமம் நகரில் கொள்வனவு செய்யப்பட்டு ஆலயங்களுக்கு வழங்கப்படும் பூசைத் தட்டுகளில் உள்ள பழங்கள் உண்பதற்கு ஏற்றதல்ல என கதிர்காமம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அஜித் குமார தெரிவித்துள்ளார்.

பல்வேறு இரசாயனங்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள், செயற்கை முறையில் பழுக்கச் செய்யப்பட்ட பிஞ்சு காய்கள் போன்றன பழக்கடைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும், அத்துடன் இங்குள்ள பழங்கள் பல்வேறு வகைகளில் மாசுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கதிர்காமத்தின் இன்றைய நிலை மற்றும் உணவு மற்றும் பழங்களின் தரம் குறித்து வினவியபோதே டொக்டர் அஜித் குமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,"கதிர்காமம் ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் பழக் கடைகளில் பழங்கள் அடங்கிய பூசை தட்டுகளை மிகவும் பய பக்தியுடன் வாங்கி பூஜைக்கு கொடுப்பர். பூசைக்கு வைக்கப்பட்டு அதே பூசைத் தட்டுக்கள் பக்தர்களிடம் வழங்கப்படும் போது அதிலுள்ள பழங்களை அவர்கள் உண்ண முயற்சித்தாலும் அவை உண்ண முடியாத நிலையிலேயே இருப்பதுண்டு.

ஹோமோன்கள் அல்லது பல்வேறு இரசாயனங்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்ட பழங்களை எடுத்த எடுப்பில் இனங்காண்பது கடினமாகும். அனைத்துப் பூசைத் தட்டுகளுமே இப்படித்தான் என நான் கூறவில்லை , ஆனால் அநேகமான பூசைத் தட்டுகளிலுள்ள பழங்கள் இத்தகைய நிலையில்தான் உள்ளன" என்றார். (ரெந-18)




சித்த மருத்துவம் ஊடான

# சுகதேகம் ஆதுலர்சாலை

(இணைந்த மருத்துவ சேவை)

## திறப்பு விழா அழைப்பிதழ்





### பிரதம விருந்தினர்

மருத்துவர் நித்தி கனகரட்ணம். ND
மெல்போர்ன் அவுஸ்திரேலியா.

### சிறப்பு விருந்தினர்கள்

ஆ. ஆனந்தராஜா – நீதிவான்
நீதவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம்

திரு .மனோஜ் குமார்,
தூதரக அதிகாரி ,
இந்திய துணை தூதரகம் யாழ்ப்பாணம்

சிவகுருநாதன் திருவாகரன்.
செயலாளர். சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு. வடக்கு மாகாணம்.

கலாநிதி ஆறு திருமுருகன்
பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை நிதியம்.

**காலம் : 11.11.2023**
**நேரம் : காலை 10.30 மணி**
**இடம் : நெய்தல் கடற்கரை நகர், நாவற்குழி**

**அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்!**

இயற்கை நலவாழ்வு சமூகம்


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2023இல் வெளியிடப்பெற்றது.